அசல் வழக்கு எண். 107/2018 தேதி. 20.09.2023.

பி.வா.சா.2- பரமசிவம்

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 1963 ம் வருடம் பிறந்தேன். சங்ககவுண்டர் பெரியக்காளிடம் இருந்து 1943 ம் வருடம் கிரையம் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. சங்ககவுண்டர் எனக்கு தெரிந்த நபர். உறவினர் இல்லை. சங்ககவுண்டருக்கு திருமணம் ஆகி 2 மகன்கள் மற்றும் ஒரு மகள் உள்ளனர். அவர்கள் சின்னாகவுண்டன்பட்டி ஊரைச் சேர்ந்தவர்கள். மணிமாறன் என்பவருக்கு 25 சென்ட் நிலம் 1975 ம் ஆண்டு சங்ககவுண்டர் கிரையம் கொடுத்ததாக சொல்லும் கிரைய ஆவணத்தில் நான் சாட்சி இல்லை. மேற்படி கிரைய பத்திரத்தில் உள்ள நான்கு எல்லை விவரம் எனக்கு தெரியாது. மணிமாறன் கிரையம் பெற்ற நிலம் புஞ்சை நிலம் ஆகும். மணிமாறன் தந்தை முத்துசாமி கவுண்டர் ஆகும். சேகர் மணிமாறனின் சகோதரர் ஆவார். மணிமாறன் தந்தை மற்றும் சகோதரர் ஒரே கூட்டு குடும்பமாக வசித்து வந்தனர். மணிமாறன் கிரையம் பெற்ற சொத்திற்கு தென்புறம் அவரது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது. மணிமாறன் சேகருக்கு முன் இறந்துவிட்டார். மணிமாறனுக்க திருமணம் முடிந்திருந்தது ஆனால் குழந்தைகள் இல்லை. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். மணிமாறன் மனைவி பாக்கியலட்சுமி தற்போது எந்த ஊரில் வசித்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. மணிமாறன் இறந்த பின்பு பாக்கியலட்சுமி எங்கு சென்றார் என்று எனக்கு தெரியாது.

எங்கள் ஊரில் யார் யார் நிலம் கிரையம் பெறுகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. மணிமாறன் இறந்த பின்பு அவரது பாகத்தை பாக்கியலட்சுமி சேகருக்கு எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. செம்பியநத்தம் கிராமத்தில் யார் யார் எவ்வளவு நிலம் அனுபவம் செய்கின்றனர் என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்து தற்போது முனியப்பன் அனுபவத்தில் இருந்து வருகிறது. அதில் ஆஸ்பெட்டாஸ் வீடு உள்ளது. அதில் சுற்றுச் சுவர் இல்லை. படல் அமைத்து உள்ளார். அதில் மின் இணைப்பு உள்ளது. 1ம் பிரதிவாதிக்கு ஊருக்குள் வேறு வீடு இல்லை. 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு ஊருக்குள் வேறு வீடு உள்ளதென்றும் அதில் அவர் தம்பி குடியிருந்து வருகிறார். எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. 1ம் பிரதிவாதி அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தாவா சொத்தை பொறுத்தும்,

**அதன் அனுபவத்தை பொறுத்தும் எதுவும் தெரியாது என்றும், 1ம் பிரதிவாதி கேட்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.
S/d. Witness xxxxx
Checked and Uploaded by Typist

S/d.Thiru.P.Balamurugan,
Principal District Munsif,
Kulithalai.